In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 157/2021 | Prosecution witness P.W.13 |
| Name: Sakthivel | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02-12-2024.

**(Accused 1 to 6 are present.**

முதல் விசாரணை :-

நான் சிங்காரக்கோட்டையில் வசிக்கிறேன். விவசாய வேலை பார்க்கிறேன். நானும் சதீஷ்குமாரும் 13.1.2019ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தோம். அப்போது வடமதுரை போலீசார் அய்யனார் பால்ஸ் என்ற இடத்தில் இருந்தார்கள். அப்போது காவல் துறையினர் எங்கு சென்று வருகிறீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் கோவிலுக்கு சென்று வருவதாக சொன்னோம். அப்போது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் சதீஷ்குமாரும் போலீசார் முன்னால் சென்ற ஜீப்பை நாங்கள் இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து சுமார் 1/2, 1 கி.மீ. தூரம் சென்றோம். அந்த இடத்தில் வைத்து போலீசார் இரண்டு நபர்களை பார்த்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சின்னையா மற்றும் வெள்ளைச்சாமி இருவரும் போலீசாரிடம் மாணிக்கக்கல் சம்மந்தமாகவும், முருகன் என்பவர் சிவா என்பவரை கத்தியால் குத்திவிட்டதாகவும் சொன்னார்கள். அப்போது நாங்கள் அங்கு நின்றிருந்தோம். அதை எழுதிக்கொண்டு எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து போட்டோம். சாட்சி ஆஜரில் இருக்கும் எதிரிகளை பார்வையிட்டு 2 மற்றும் 5வது எதிரிகளை அடையாளம் காட்டி அவர்களை அன்றைய தினம் போலீசார் விசாரித்ததாகக் கூறினார். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சின்னையா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தின்

அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.6. பின்னர் நானும் சதீஷ்குமாரும் இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு சென்றுவிட்டோம். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நானும் சதீஷ்குமாரும் ஒரே வாகனத்தில் தான் சென்றோம். சதீஷ்குமார் எந்த ஊர் என்றால் நான் கோவிலுக்கு சென்றுகொண்டிருந்தபோது என்னிடம் லிப்ட் கேட்டு என்னுடன் வந்தார். எனவே அவரது ஊர் எனக்கு தெரியாது. அவர் சொன்னதை வைத்து அவர் பெயர் சதீஷ்குமார் என தெரிந்து கொண்டேன். அன்றைய தினம் நாங்கள் வெள்ளிமலை முருகன் கோவில் சென்றோம். வெள்ளிமலை முருகன் கோவில் செந்துரையை தாண்டி சுமார் 8,9 கி.மீ. தொலைவில் உள்ளது. வெள்ளிமலை முருகன் கோவில் வரை தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். கொஞ்ச தூரம் ரோடு மோசமாக இருக்கும். மெயின் ரோட்டிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரம் வரை ரோடு மோசமாக இருந்தது. எதிரிகளை கைது செய்தது வெள்ளிமலையில் வைத்து என்றால் இல்லை. வெள்ளிமலை கோவிலில் இருந்து 8,9 கி.மீ. தாண்டி நாங்கள் திரும்ப வரும்போது அய்யனார் பால்ஸ் அருகே வைத்து கைது செய்தார்கள். அய்யனார் பால்ஸ் தார் ரோட்டை ஒட்டி உள்ளது என்றால் சரிதான். வெள்ளிமலை முருகன் கோவிலில் இருந்து என் ஊருக்கு செல்லவேண்டும் என்றால் அய்யனார் பால்ஸ் போகவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. அதன் வழியாகத்தான் போகவேண்டும். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் அய்யனார் பால்ஸ் பிரிவில் நின்று கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் வைத்துத்தான் போலீசார் எதிரிகளை கைது செய்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார்கள். நான் கையெழுத்து செய்த பேப்பரில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அய்யனார் பால்ஸ் பிரிவில் 2 மற்றும் 5 வது எதிரிகளை போலீசார் கைது செய்யவில்லை என்றாலும், அசாஆ.6 ல்

காவல் நிலையத்தில் வைத்து எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.02 17:35:37 +0530

Principal District Judge,
Dindigul.